**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**

**CC No.126/2014**

Deposition of the witness for Prosecution **PW** 8

Name : திரு.முனீஸ்வரன் (காவல் ஆய்வாளர்)
Father's/Husband's Name : முத்துக்காமாட்சி
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (12.02.2024).

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு –317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**முதல் விசாரணை**

1. நான் தற்போது வேலூர் ராணிப்பேட்டை மாவட்டம் ACTU (Anti Child Traffic Unit) பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் தற்போது அறுவை சிகிச்சை மேற்கொண்டதால் மருத்துவ விடுப்பில் இருந்து வருகிறேன். கடந்த 17.03.2013 ஆம் தேதி 17.00 மணிக்கு செங்கோட்டை வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது தென்காசி அனைத்து மகளிர் காவல்

நிலைய காவல் ஆய்வாளராகவும் கூடுதல் பொறுப்பில் பணியில் இருந்தேன்.

2. அப்போது அன்றைய தினம் நிலைய பொறுப்பில் இருந்த தலைமை காவலர் செல்வி என்பவர் பதிவு செய்து வைத்த தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண். 13/2013 வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே 18.30 மணிக்கு இந்த வழக்கின் சம்பவ இடமான இந்த வழக்கின் எதிரி சின்னத்துரை என்ற சிவக்குமார் என்பவரது வீட்டில் வைத்து சாட்சிகள் சங்கர் மற்றும் குமார் ஆகியோர் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.) பின்னர் வழக்கின் பட்டியல் சாட்சிகள் ஒன்று முதல் எட்டு ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கில் ஒன்று முதல் ஐந்து எதிரிகள் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. அத்துடன் எனது விசாரணையை முடித்து 04.11.2013 ஆம் தேதி எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3. முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவில் எந்த

தேதியில் ஒன்றாவது எதிரி சின்னதுரை மற்றும் சாட்சி தங்கம் ஆகியோருக்கு இடையே திருமணம் நடைபெற்றது என்றும், எந்த தேதியில் குழந்தை பிறந்தது என்றும், எந்த விதமான விவரங்களும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் கலம் எண் 3 இல் குற்ற நிகழ்வு நாள் 10.12.2006 ஆம் தேதி திருமணமாகி சில மாதங்கள் கழித்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி திருமணம் ஆகி 7 ஆண்டுகள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனு கொடுத்த தேதி 17/03/2013 என்றால் சரிதான். மேற்படி 2006 ஆம் ஆண்டு திருமணமானது முதல் இந்த புகார் கொடுக்கப்பட்ட 17.03.2013 ஆம் தேதி வரை சின்னத்துரை மற்றும் சாட்சி தங்கம் ஆகியோருக்கு இடையே பிரச்சனை ஏற்பட்டதாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

4. எந்த தேதியில் எதிரிகள் பணம் கேட்டார்கள், எந்த தேதியில் நகை கேட்டார்கள் என்று எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்ன விதமாக கொடுமை செய்தார்கள் என்றும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் இரண்டாவது குழந்தை பிறப்பதற்காக சாட்சி தங்கம் ஆலங்குளம் பக்கத்தில் அவரது ஊரில் இருந்ததாக கூறியுள்ளார் என்றால்

சரிதான். மேற்படி சாட்சி தங்கத்தின் ஊர் நல்லூரில் சென்று நீங்கள் யாரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி மேற்படி சாட்சி தங்கம் இருந்த ஊரில் சென்று பிரச்சனை செய்ததாக உங்களது விசாரணையில் யாரும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்ற சட்ட பிரிவுகளுடன் வரதட்சணை தடுப்பு சட்டம் பிரிவு 4 மட்டும் வேறு நபரால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவில் பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ய கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றும், குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இரண்டாவது எதிரியுடன் முதல் எதிரி சேர்ந்து வாழ்வதாக சொல்லியிருந்தாலும் இரண்டாவது திருமணம் முதல் எதிரி செய்து கொண்டாரா என்று நீங்கள் விசாரிக்கவில்லை என்றும், அது தொடர்பான எந்த விதமான வழக்கும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் வரதட்சணை தடுப்பு சட்டம் பிரிவு 4 யாரால் எழுதப்பட்டது என்று நீங்கள் விசாரிக்கவில்லை என்றும், நீங்கள் எழுதவில்லை என்றும் சொன்னால் சரிதான். நீங்கள் இந்த வழக்கை சரியாக விசாரிக்காமல் பிழையான இறுதி அறிக்கை தாக்கல்

செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. இரண்டாவது, மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் தவறானது என்றும், எதிரிகளுக்கும், அதற்கும் சம்பந்தமில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/–M.Sunil Raja,
District Munsif cum Judicial Magistrate,
Shenkottai